**செய்தி வெளியீடு எண்:1086** **நாள்:11.11.2021**

**நிதி (வழிவகைகள்-II )த் துறை,**

**செய்தி வெளியீடு, நாள்: நவம்பர் 11, 2021**

தமிழ்நாடு அரசு **ரூபாய் 1000.00 கோடி** மதிப்புள்ள பங்குகள் வடிவிலான **8 ஆண்டுகால பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை** செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள - கோட்டை அலுவலகத்தில் **நவம்பர் 16, 2021** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **நவம்பர்** 16, 2021 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நா. முருகானந்தம்,
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை-9.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**